தமிழ்ச் சிட்டு

கவர்ச்சிக் கலைகளால் நாடு வீழ்ந்திடும்!

'கவர்ச்சிக் கலைகளில்
மனம் மொய்த்துக் கிடக்கும்
கணக்கிலா இளைஞரைப்
பார்க்கிறோம்! — உளம்
வேர்க்கிறோம்! — வெறும்
சுவர்ச்சித் திரங்களை
அடித்தடித் தொட்டுவார்,
சுரண்டல் திரைப்படக்
காரர்கள்—கொலை—காரர்கள்!

பள்ளிக் குழந்தைகள்,
கல்லூரி இளைஞர்கள்,
பாவையர், முதுமையர்
எவருமே — நெறி
தவறவே — பகற்
கொள்ளை யடித்திடும்
கூட்டமே திரைப்படக்
கொலைஞர்கள், கலைஞர்கள்
என்பவர் — மூளை — தின்பவர்!

இளைஞர்கள் இளைஞைகள்
இல்லற மகளிரும்
எச்சரிக் கையுடன்
இருக்கவும் — அரசை
நெருக்கவும்! — நல்ல
விளைவுகள் இலாவிடில்
வீழ்ந்திடும் பண்புகள்;
வீழ்ந்திடும் பெருமைகள்!
வீழ்ந்திடும் நாடும் ஆழவே!

ஆசிரியர்: பெருஞ்சித்திரன்

குரல் : 22
இசை : 3

விலை :
உருபா : 1-50

ஆசிரியர்களின் அவல நிலை!

O தமிழகத்தில் உள்ள மொத்த தொடக்கப் பள்ளிகள் 29,907, இவற்றில் பணிபுரியும் ஆசிரியர்கள் 71,336; ஆசிரியைகள் 48,585: இவர்களுள் ஆண்டுதோறும் ஓய்வு பெறுபவர்கள் 4,000-பேர். இந்த வெற்றிடங்களுக்கும், மாணவர்களின் புதிய சேர்க்கைகளால் உருவாக்கப்படும் பணியிடங்களுக்கும் புதிய ஆசிரியர்கள் சேர்க்கப்படுவதில்லை என்னும் குறையை தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி கூறுகிறது: இதில் இன்னும் உள்ள ஒரு கொடுமையான வியப்பு என்னவென்றால், இன்றைய நிலையில் ஆசிரியர் பயிற்சியை முடித்துவிட்டு வேலைக்காகக் காத்திருக்கும் பயிற்சி ஆசிரியர்கள் ஏறத்தாழ 45,000 பேர் உள்ளனராம்!

உலக உளவு நிறுவனங்கள்!

O ஏற்கனவே அமெரிக்க உளவு நிறுவனம் (C.I.A)உம், உருசிய உளவு நிறுவனம் (K.G.P)யும், இந்தியாவில் 1947 முதலே இயங்கி வருவதும், அவற்றுடனும், பிற பிரான்சு, போலந்து, செருமன் நாட்டு உளவு நிறுவனங்களுடனும் இந்திய தலைமையமைச்சர் அலுவலகத்திலும் நடுவண் உள்துறை அமைச்சகத்தில் பணியாற்றிய அமைச்சர் மொரார்சி, கோபாலன், சங்கரன், டி.என். கவுர், கே.கே. மல்கோத்தரா, சி.எல். செனுை போன்றவர்களும் தொடர்பு கொண்டு, இந்தியாவின் படைத்துறை, தொழில் நுட்பம், அரசியல் உள்பட அனைத்துத் துறைக் கமுக்கங்களையும் விற்றுவந்ததுடன், பலவகையான ஆளழிப்புகள், அதிகார மாற்றங்களுக்கும் காரணமாக இருந்ததெல்லாம் ஊரும் உலகமும் அறிந்த செய்திகள். இந்த முயற்சிகளை அரசு இன்னும் ஒடுக்கி விடவில்லை. இத்தகைய முயற்சிகளில் ஒன்றாகவும் இராசீவின் அழிப்புச் செயலும் இருக்கலாம் என்று அரசியல் உயர் மட்டங்களிலும் கட்சிகளிலும் உள்ள அதிகாரிகள் சிலரும் கருத்துத் தெரிவித்துள்ளதையும் நாம் கவனிக்க வேண்டும்.

பாராளுமன்றச் செலவு 1000 கோடி உருபா!

O பாராளுமன்றத் தேர்தலில், பாராளுமன்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் தோராயமாக 2 கோடி செலவழிக்கப்படுகிறது: இதை அரசும் வேட்பாளரும் சேர்ந்துச் செய்த செலவாகக் கருதப்படுகிறது. இதில் ஒரு வேட்பாளர் தன்னளவில் 15 இலக்கம் முதல் 25 இலக்கம் வரை செலவிடுகிறார்: மீதி 1.75 கோடியை அரசு செலவு செய்ய வேண்டியுள்ளது: இந்த வகையில் ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு 2 கோடி மேனி அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஆகும் மொத்த செலவு தோராயமாக 1000 கோடி உருபா ஆகும். இது மக்கள் பணமாகும். இந்தப் பணத்தில் பம்பாய். கல்கத்தா, உத்திரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், சென்னை போலும் பெரிய மாநிலங்கள் ஒவ்வொன்றுக்கும் ஓர் ஆண்டுக்குத் தேவையான திட்டப் பணிகளைச் செய்து முடிக்கலாம். இவ்வளவு செலவு செய்து நடத்தப் பெறுகிற தேர்தலும் ஒழுங்காக நடப்பதில்லை என்பது உலகறிந்த செய்தி! O

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005. (தமிழகம்)

தெரிந்து கொள்ளுங்கள்

- 'பிற மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய மாநிலங்களில் வேலை வாய்ப்பைப் பெறுவதைத் தடை செய்யும் போக்கு அனைத்து மாநிலங்களிலும் அதிகரித்து வருகிறது கவலையைத் தரும் செய்தியாகும்' என்று நடுவண் தொழில்துறை அமைச்சர் பி.ஏ. சங்மா, ஆகத்து நடுவில் தில்லியில் நடந்த மாநாட்டில் குறிப்பிட்டார்.
- தமிழகத்தில் இருந்தாலும் தில்லி ஆட்சியின் கீழ் தனித்து இயங்கும் புதுச்சேரி நகரம் 19.46 ச. அ. மா. (ச.கி.மீ)பரப்பளவும், 2,02,648 மக்கள் தொகையும் கொண்டதாகும்.
- கி.பி. 17-ஆம் நூற்றாண்டில் ஆர்க்காட்டைத் தலைநகராகக் கொண்டு ஆர்க்காட்டு நவாபுகள் தமிழகத்தின் பெரும்பகுதியை ஆட்சி செய்து வந்தனர். அவர்களில் மிகவும் முகாமையாகக் குறிப்பிடத்தக்கவர் 'முகமதுஅலி வாலாஜா' என்பவர். இவர் கி.பி. 1749 முதல் கி.பி. 1795 வரை 46-ஆண்டுகள் அரசாட்சி செய்தார். இவர் பெயரால் அமைந்த ஊரும், சாலையும்தாம் வாலாஜாபேட்டையும், சென்னை வாலாஜா சாலையும்.
- இந்தியாவில் செய்யப் பெறும் கண்ணாடிகளின் மொத்த அளவில் முக்கால் பங்கு உத்திரப் பிரதேசத்தில் உள்ள பிரோசோபாதி என்னும் ஊரில்தான் உருவாக்கப் பெறுகிறது.
- மகாபாரதக் கதையில் ஓர் இலக்கம் சொலவகங்கள்(ஸ்லோகங்கள்) உள்ளனவாம்.
- சுறா மீன்களில் 250 வகைகள் உள்ளனவாம். இவற்றில் மிகப் பெரியது திமிங்கலச் சுறா. சுறா மீன்களில் சில முட்டையிட்டுக் குஞ்சுகளைப் பொறிக்கும், சில குட்டிகள் போடுமாம்.
- மதுக் குடிப்பானது ஒருவரை 'எதைப் பேசலாம்; எதைப் பேசக்கூடாது' என்னும் அமைவை(நிதானத்தை),தன்னடக்கத்தை இழக்கச் செய்கிறது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.
- கருப்பு வயிரம் என்று அழைக்கப் பெறும் நிலக்கரி இந்தியாவில் 19,200 கோடி கல்லெடை(டன்) உள்ளது என்று மதிப்பிடப்பெற்றுள்ளது. இருப்பினும் இ'து உலகின் நிலக்கரி வளத்தில் ஒரு விழுக்காடு மட்டுமே.
- நம் மூக்கின் நுகரும் ஆற்றல் 45 அகவைக்குப் பின் படிப்படியாகக் குறையத் தொடங்குகிறது.
- ஒரு விநாடி(நொடி)யை ஆயிரம் கூறுகச் செய்த நேரத்தை அறிவியலாளர் மில்லி விநாடி (அயிர விநாடி)என்றுபகுக்கின்றனர். இந்த அலகைக் கொண்டு நாம் நுகரும் உணர்வுகள் நம் உணர்வுப் புலன்களில் நீடித்திருக்கும் நேரத்தை அளவிட்டிருக்கின்றனர். எடுத்துக் காட்டாக, நாம் ஒரு பொருளை — உணவை-நாவால் சுவைக்கின்றோம். அந்தச் சுவை எவ்வளவு நேரம் நம் நாக்கில் தங்கியிருக்கும் என்றால் 1.5 மில்லி நொடி முதல் 4 மில்லி நொடி வரை என்று அளவிட்டிருக்கின்றனர். அப்படியே மூக்கின் மணவுணர்வு 0.1மி.வி. அல்லது அதற்கும் குறைவே. தொடு உணர்வின் நீடிப்பு நேரம் 2.4 முதல் 8.9.

(தொடர்ச்சி அட்டை 3 ஆம் பக்கம்)

தமிழ்ச்சிட்டு

இன்றைய பயனே நேற்றைய உழைப்பு!
இன்றைய சிறுவர் நாளைய உலகம்!
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை!
என்றும் அழியாது இருப்பது புகழே!

குரல்- 22] (தி.பி. 2024) சுறவம் (சன-பிப்: 93) [இசை 3

இருளும் மருளும்!

இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு —352.

—என்பது திருக்குறளில், 'மெய்யுணர்தல்' என்னும் அதிகாரத்துள் வரும் குறட்பா ஆகும்.

'மெய்யுணர்தல்' என்பது, உண்மையை உணர்தல் என்று பொருள் படும். இந்த அதிகாரத் தலைப்பில் உள்ள பத்து உண்மைகளுள் இந்தக் குறட்பாவிலும் ஓர் உண்மை சொல்லப்பெறுகிறது.

அந்த உண்மை இது: மனத்தில் உள்ள மயக்கத்தை நீக்கிக் கொண்டு குற்றமில்லாத பார்வைத் திறனுடையவர்களுக்கே, அவர்களது அறிவின்மேல் படர்ந்துள்ள அறியாமை இருள் நீங்கி, இவ்வுலகம் இன்பம் தருவதாக இருக்கும்.

இதில் பெரியதோர் உண்மையை மிக எளிதாக விளங்க வைக்கிறார் பேராசான் திருவள்ளுவப் பெருந்தகை.

''இவ்வுலகம் துன்பமுடையது; எங்கும் எதிலும் துன்பமே நிறைந்துள்ளது; பிறப்பது துன்பம்; பிறந்த பின் வளர்வது துன்பம்; கற்பது துன்பம்; கற்றபின் அதற்குத் தக நிற்பதுதுன்பம்; பிறகு குடும்ப வாழ்க்கை துன்பம்; குழந்தைகளை வளர்ப்பது துன்பம்; பணியாற்றுவது துன்பம்; பொருள் திரட்டுவது துன்பம்; அதைப் பாதுகாப்பது துன்பம்; அதைப் பறிகொடுப்பது, செலவிடுவது துன்பம்; உண்பதற்குத் துன்பம்; உடுப்பதற்குத் துன்பம்; உறங்குவதற்குத் துன்பம்; நோய்த் துன்பம்; உற்றார் துன்பம்; உறவினர் துன்பம்; வாழ்க்கை அனைத்துமே துன்பம்; மொத்தத்தில் நாம் துன்பக் கடலில்—பிறவியென்னும் பெருங்கடலில் தத்தளிக்கின்றோம்; பிறவாமல் இருப்பதே பேரின்பம்''—என்றெல்லாம் நம் மனம் துன்பத்தில் கிடந்து உழல்கிறதாக நாம் எல்லாரும் கருதிக் கொள்கிறோம். இவற்றுக்கிடையில் ஆங்காங்குச் சிறு சிறு இன்பம் கிடைப்பதாகவே நாம் எண்ணுகிறோம். இந்த மனநிலை தவறு என்கிறது இக் குறட்பா.

இவ்வுலகம் இன்ப உலகம். துன்ப உலகம் அன்று. இதிலுள்ள பொருள்கள் அனைத்தும், அவற்றின் தோற்றங்கள், இருப்புகள்,

இயக்கங்கள், பயன்கள் அனைத்தும் இன்பங்களை அள்ளி அள்ளித் தருவன. இவற்றுள் நமக்குத் துன்பம் தருவது ஒன்றுமே இல்லை. நம் துன்பத்திற்கு எதுவுமே காரணம் இல்லை. நன்றாக தெளிவாகச் சொன்னால் நமக்குத் துன்பம் தருவதாக நாம் கருதும் எதுவும் இவ்வுலகத்தின் வெளிப்புறத்தில் இல்லை; நமக்கு வெளியே உள்ள அனைத்தும் நமக்காக உள்ள இன்பம் தரும் பொருள்களே!

கதிரவன் நமக்குத்துன்பம் தருகிறதா? இல்லை. அதுதான் நம் தோற்றத்திற்கே காரணமாவது. காற்று நமக்குத் துன்பம் தருகிறதா? இல்லை. அதுதான் நம் இயக்கத்துக்கே அடிப்படை-யானது. மழை நமக்குத் துன்பம் தருகிறதா? இல்லை. அதுதான் நம் வாழ்க்கைக்கே வளம் தருவது. தீ நமக்குத் துன்பம் தருவதா? இல்லை; இல்லவே இல்லை. அதுதான் நம் உணவுப் பொருள்கள், உடல் நலன்கள் அனைத்துக்கும் மூலமானது. பிறகு, இந் நிலம், வானம், மலை, காடு, ஆறு, கடல், பறவைகள், விலங்குகள் முதலிய அனைத்துப் பொருள்களும் நமக்கு அனைத்து வகையிலும் உறுதுணையாக இருந்து உதவுகின்றனவே!

பின் எதற்காக நாம் துன்பப்படுகிறோம்? நாம் நம்மால்தான் துன்பம் அடைகின்றோம். தீமையானாலும் நன்மையானாலும் அதன் தோற்றமும் தாக்கமும் நமக்குத்தான்; 'தீதும் நன்றும் பிறர் தர வாரா', நாமேதான் நமக்குத் துன்பம் கொடுத்துக் கொள்கி-றோம். தீமை விளைவித்துக் கொள்கிறோம். நமக்கு வரும் நோய்-களைக் கூட நாமேதான் வருவித்துக் கொள்கிறோம். நமக்குப் புறத்தே இருந்து வருகின்ற நோய்களைவிட அகத்தே இருந்து வரும் நோய்கள்தாம் மிகுதி. நம்அறியாமையால், மிகைப்பட உண்பதால், உழைப்பதால், இன்ப நுகர்ச்சிகள் பெறுவதற்காகப் புலன்களையும் பொறிகளையும் வருத்துவதாலேயே நமக்கு மிகுதி-யும் நோய்கள் வருகின்றன.

எனவே, எந்த வகையில் பார்த்தாலும் உலக நிலைகள் நமக்குத் துன்பம் தருவனவாக இல்லை. நம்மால்தான் நமக்குத் துன்பம், துயரம், கொடுமை ஆகியவை நேர்கின்றன. நம்மால் என்றால், அவரவரால், அவரைச் சுற்றியுள்ளவர்களால், ஒருவ-ருக்கொருவரால், ஒருவரால் பிறர்க்கு, பிறரால் ஒருவர்க்கு என்னும்படி துன்பங்கள் வருகின்றன. மற்றபடி இவ்வுலகத்-தாலும் அதிலுள்ள பொருள்களாலும் நமக்குத் துன்பங்கள் நேர்வன இல்லை என்று நாம் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

அவ்வாறானால், நம்மால் நமக்கு எப்படித் துன்பம் வருகிறது எனில், நம் மனத்தாலும், அறிவாலும் நமக்கு நாமே துன்பம் தந்து கொள்கிறோம் என்க. அஃதெப்படி? மனம் தேவையில்லாத வற்றைத் தேவை என்று விரும்புகிறது. அதேபோல் தேவையான-வற்றைத் தேவையில்லை என்று வெறுக்கிறது. இதற்கு மயக்கம், மருள் என்று பெயர். இனி, அறிவாலும் அதேபோல் துன்பம் வருகிறது. அஃதெப்படியெனில், அறிவு நல்லனவற்றைத் தீயவை என்றும், தீயனவற்றை நல்லன என்றும் உண்மையைப் பொய்-

யென்றும், பொய்யை உண்மை என்றும் கருதுகிறது: இதற்கு அறியாமை, இருள் என்று பெயர்:

இவ்வகையில், மனத்தினது மருளும் அஃதாவது மயக்கமும், அறிவினது இருளும் அஃதாவது அறியாமையும் தனித்தனியாகவோ, இரண்டும் இணைந்தோ செயல்பட்டுத்தான் நமக்கு மனத்துன்பம், அறிவுத்துன்பம், உடல்துன்பம் ஆகிய துன்பங்களைத் தொடர்ந்து தந்து கொண்டே இருக்கின்றன: இந்தத் துன்பங்கள் வராமல் இருக்கவேண்டுமானால் மன மருளும், அறியாமை இருளும் நம்மிடமிருந்து நீங்குதல் வேண்டும் என்பதைத்தான் இக் குறட்பாவின் மூலம் திருவள்ளுவப் பேராசான் நமக்கு அறிவுறுத்துகிறார். அஃதாவது மனத்தில் உள்ள மயக்கமாகிய மருள் நீங்கியவுடன் நம் உலகப் பார்வை தெளிவுபடுகிறது; மாசு இல்லாத காட்சி நமக்குக் கிடைக்கிறது: மாசு இல்லாத மனத்துடன் உலகத்தையும், உயிரினங்களையும், இயற்கைப் பொருள்களையும், மக்களையும் பார்க்கும் பொழுது நமக்கு அவை அனைத்தும் நம் நன்மைக்கும் இன்பத்திற்காகவுந்தாம் இருக்கின்றனவாக நமக்குப் படுகிறது. எனவே மனத்தால் வரும் துன்பம் நம்மளவில் நமக்கு நீங்கி விடுகிறது: 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறம்' (34) என்கிறது இன்னொரு திருக்குறள்: அஃதாவது மனத்தில் மாசில்லாமல் நாம் செய்து கொண்டவுடன் நமக்குப் பொதுநலப் பார்வையாகிய அறப்பார்வை—அறவுணர்வு—தோன்றி விடுகிறது. அதன்பின் நமக்குத் தனி நலவுணர்வு—தன்னலம்—அகன்றுவிடவே, அதனால் பெறும் துன்பமும் நீங்கி விடுகிறது.

இனி, மன மாசு நீங்கி மனத்துன்பமும் நீங்கியவுடன் அறிவில் உள்ள அறியாமையிருளும் படிப்படியாக அகன்று விடும்: அதன் பின் எந்த நிலையாலும் நாம் துன்பத்தை உணர்வதில்லை என்கிறார் திருவள்ளுவர்.

நாம் ஒருவரைப் பார்த்துப் பொறாமைப் படுவது, ஒன்றுக்காகப் பேராசைப்படுவது, அது கிடைக்கவில்லை என்று சினம் கொள்வது—முதலிய அனைத்து உணர்வுகளும் மனத்தில் ஏற்பட்ட மாசுகளால் வருவன. இவையே மயக்கவுணர்வுகள்: இவை உள்ள பொழுது பிறரை நாம் வெறுக்கிறோம்; பகை கொள்கிறோம்: நாம் அவ்வாறு செய்யவே அவர்களும் நம்மேல் வெறுப்பும், பகையும் காட்டுகிறார்கள். இவற்றால் நமக்கு விளைவதெல்லாம் துன்பமே: அதேபோல் அவர்களுக்கும் நம்மால் துன்பமே வருகிறது. இவை அறவே நீங்க, அறிவும் அறியாமை நீங்கி இன்பம் பெறுகிறது.

இந்த உண்மைதான், 'மருள் நீங்க மாசு அறு காட்சியவர்க்கு இருள் நீங்கி இன்பம் பயக்கும்' என்னும் மெய்ப்பொருள் உண்மையாகும், என்க: ○

வானொலியும் தொலைக்காட்சியும் மக்களை ஏமாற்றுகின்றன!

''தொலைக்காட்சியில் 'வயலும் வாழ்வும்' வானொலி போன்றவை உழவர்களை மூளை வெளுப்புச் செய்கின்றன. அந் நிகழ்ச்சிகளில் மாநிலத்தின் வேளாண்துறை அதிகாரிகள் பங்கேற்று, பூச்சிக்கொல்லி மருந்துகளை அடிப்பதால் பயிர்களின் நோய்கள் தீர்ந்து விடுவதாகவும், அவற்றைச் சேதப்படுத்தும் பூச்சி புழுக்கள் அழிக்கப்படுவதாகவும். அம் மருந்துகளால் எந்த வகையான கேடுகளும் மக்களுக்கு நேர்வதில்லை என்பதாகவும் அடித்துப் பேசி வருகிறார்கள். அவர்களின் உழவியல் அறிவு கேள்விக்குரியதாகி விடுகிறது.

இத்தகைய மாநில வேளாண்மைத் துறை அதிகாரிகளுக்கு இன்றைய உலகில் வேளாண்மைத் துறையில் என்ன நடக்கிறது என்றே தெரிவதில்லை.

தமிழ் நாட்டில் விளையும் காய்கறி, பழங்களில் 95 விழுக்காடு நஞ்சு கலந்துள்ளது. ஆனால் இதுபற்றித் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஒன்றும் தெரியாதது போல் அமைதியாக இருப்பது வியப்பளிக்கிறது.

பொதுவாகவே பல்வேறு பயிரியல், உழவியல் செய்திகளைப் பற்றித் தொலைக்காட்சி அல்லது வானொலியில் பேசும், தொடர்புள்ள வேளாண்மைத் துறை அதிகாரிகள் ஏதோ குருட்டுப் பாடமாக ஒன்றைப் படித்துத் தங்களின் குறைந்த அறிவை வெளிப்படுத்திக் கொள்வதாகவே தோன்றுகிறது. அவை அத்தனையும் சுவைக்குதவாத வெறும் பேச்சுகளே!'

—இவ்வாறு கருத்துரைத்திருப்பவர் வேறு எவருமல்லர்; எதிர்க் கட்சியினரும் அல்லர். இந்திய நடுவண் அரசின் கீழ் இயங்கும் வேளாண்மை ஆய்வுக் கழகத்தில் வெளியிடப் பெற்ற ஆராய்ச்சிக் கட்டுரைக் கருத்துகளின் அடிப்படையில்தான் வேளாண்மைத் துறை ஆய்வறிஞர் முனைவர் எம். எசு. சுவாமிநாதன் என்பவர் ஒரு கருத்தரங்கில் மாநில அரசின் நடவடிக்கைகளையும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் செயற்பாடுகளையும் கண்டித்துப் பேசினார்.

—அடிப்படை: 'தினமணி' 22-10-92

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். அமைச்சர் 3

மதுக்கடைக்கு ஆகும் செலவு!

சென்னையில் ஒரு மதுக்கடையை இப்பொழுதுள்ள சூழ்நிலையில் ஒருவர் தொடங்கி நடத்த வேண்டுமானால் அவர் எந்தெந்த வகையில் எவ்வெவ்வளவு செலவழிக்க வேண்டும் என்பது பற்றி, அக் கடையை ஏலம் எடுத்த ஒருவர் கீழுள்ள கணக்கைத் தந்திருக்கிறார்.

1) ஏலத்தொகை (தோரா) உரு:	3,00,000
2) ஏலத்துக்கு முன் கட்டும் ஏலங் கேட்கும் உரிமை(டேவணி)த் தொகை	10,000
3) குடிப்பகம்(Bar)வைத்து நடத்த அரசுக்குச் செலுத்த வேண்டிய உரிமத் தொகை	60,000
4) மதுக் கடை வைக்க முன் பணம்	1,00,000
5) பகடித் தொகை (தோரா)	1,00,000
6) மிசை, நாற்காலிகள், குளிர் பதன ஏற்பாடு போன்றவற்றிற்கு	75,000
7) சரக்கு இருப்புக்குக் குறைந்த அளவு	2,50,000

(கடும் போட்டியிருந்தால் இத் தொகைகள் மேலும் மேலும் அதிகரிக்கும்.)

8) இவை தவிர மாத செலவுகளாக;

1) கடை வாடகை	5,000,
2) வேலையாட்கள் சம்பளம், மின் கட்டணம்	4,000.
3) பலவகை அதிகாரிகள் கையூட்டுக்கு	6,000

(இந்த அளவுக்குச் செலவுகள இருக்கும்போது மாதம் ஒன்றுக்கு உரு 30,000 அளவுக்கு ஊதியம் கிடைத்தால்தான் கடையைத் தொடர்ந்து நடத்த முடியுமாம்)

—நன்றி, தினமணி 27-5-92

தங்கமே தங்கம்.

தங்கத்தின் விலைகள் கடந்த காலத்திலும் இன்றைய நிலையிலும் ஒப்பிட்டுப் பார்ப்பதற்காக இங்கு தரப்படுகின்றன:

1922-இல் 1 பவுன் (8 கிராம்) உருபா	16-00
1947-இல் (நாடு விடுதலை பெற்ற பொழுது) ,, ,,	103-00
1952-இல் ,, ,, ,,	89-00
1972 இல் ,, ,, ,,	130-00
1973-இல் ,, ,, ,,	272-00
1986 இல் ,, ,, ,,	1872-00
1987 இல் ,, ,, ,,	2000-00
1988-இல் ,, ,, ,,	2576-00
1991-இல் ,, ,, ,,	3024-00
1992- சனவரியில் ,, ,,	3880-00
1992 பிப்ரவரியில் ,, ,,	3624-00
1992- ஏப்பிரல் இறுதியில் ,, ,,	3608-00

அஃதாவது 70 ஆண்டுகளுக்கு முன் ஒரு கிராம் விலை உரு 2: இன்று ஒரு கிராம் விலை உரு: 451. எழுபது ஆண்டுகளில் 225 மடங்கு அதிகம்!

O

உலகில் குடியரசு ஆட்சியின் மேல் வெறுப்பு வளர்கிறது!

O 1769 ஆம் ஆண்டில் வரலாற்றுச் சிறப்பு மிக்க பிரெஞ்சுப் புரட்சி நடந்து, பிரான்சில் குடியரசமைப்பு உருவானது மட்டுமன்றி, உலகிற்கே குடியரசு, மக்கள் உரிமை, சமநிலைக் கோட்பாடு ஆகிய உணர்வுகளையும் பிரான்சு பரப்பியது. உலகமே பிரான்சின் குடிநாயக வளர்ச்சியைப் பார்த்து வியந்தது. ஆனால் இப்பொழுது அங்கு மீண்டும் முடியரசு முறையை மக்கள் விரும்புவதாகவும் தெரிகிறது: காரணம் அங்கும் அரசியல்காரர்களின் மக்களுக்கு மாறான நடத்தைகளால் மக்கள் குடியரசு அமைப்பையே குறைவாகக் கருதுகிறார்கள்.

மக்களாட்சி முறையில் அரசியல் கட்சிகளிடையே நேர்மை, ஞாயம், உண்மை, பொதுவொழுங்கு, தொண்டுணர்வு ஆகியவை குறைந்து, தன்னலம், கையூட்டு, ஊழல், கொள்ளையடிப்பு, ஞாயமற்ற நடத்தைகள் ஆகியவை மிகுந்து வருவதால் பொதுவாகவே உலக நாடுகளின் குடியரசு அமைப்பு நாடுகளில் மக்கள் குடிநாயக அமைப்பையே வெறுத்து வருகிறார்கள், இதற்கு பிரான்சு, செருமனி, இத்தாலி போலும் நாடுகளே சான்றுகளாக கூள்ளன. O

உலகிலேயே மிகப் பெரிய செடி!

உலகில் எத்தனையோ மிக வியப்புக்குரிய செடி, கொடிகள், உள்ளன. தொட்டவுடன் இலைகளைச் சுருக்கிக் கொள்ளும் தொட்டால் சிணுங்கி, பூச்சிகள் வந்து உட்கார்ந்த உடனேயே மூடிக்கொண்டு அவற்றை உண்ணும் நச்சுச் செடிகள், 12-ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் குறிஞ்சிச் செடி, பல குறுக்கங்கள் (ஏக்கர்கள்) பரவி வளரும், ஆலமரம், 350 அடி உயரத்திற்கு வளரும். அமெரிக்க செம்மரம், எட்டு அடி குறுக்களவுடைய ரப்ளேசியா பூ, ஓர் ஆள் படுத்த வாக்கில் மிதந்து செல்ல வல்ல இலைகளுடைய விக்டோரியா ரீஜியா—இவ்வாறு நிறைய நிலைத்திணைகள் உண்டு. இந்த வகையில் அமெரிக்காவில் சாயுவாரோ என்னும் ஒரு வகைக் கள்ளிச் செடி 78 அடி உயரம் வளர்கிறது: இது 200 ஆண்டுகளுக்கு மேலாக வளரும். 75 ஆண்டுகளுக்குப் பின்னர்தான் பூக்கும். இக் கள்ளிச் செடியின் எடை 11கல்லெடை. (இந்திய யானையை விட மிகவும் அளவில் பெரிய ஆப்பிரிக்க யானையின் எடையே எட்டு கல்லெடைதான் என்பதை எண்ணுக). இந்தக் கள்ளிச் செடி நெட்டையாக வளரும். உலகிலேயே பெரிய கள்ளிச் செடி இதுதான். இவை அமெரிக்காவில் அரிசோனா மாநிலத்திலும், தென்கலிபோர்னியாவிலும் வளர்கின்றன.

O

உலக நாடுகளைத் தெரிந்து கொள்ளுங்கள்!

34. சிரீலங்கா (SRILANKA) —குடியரசு.

நிலப்பரப்பு : 6,5610 ச,அ.மா.
மக்.தொ : 1,48,50,000
மக்.தொ பெ : 1.7%
மக்.வா.எ : ஆண்: 64, பெண்: 67 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 84%
தலைநகர் : கொழும்பு.
மொழி : சிங்களம், தமிழ்
நாணயம் ; சிரீலங்கா உருபா = 100 செண்ட்ஸ்.

35. கம்பூச்சியா (KAMPUCHEA) —குடியரசு.

நிலப்பரப்பு : 1,81,035 ச.அ.மா.
மக்.தொ. : 66,80,000
மக்.தொ.பெ : 2.9%
மக்.வா.எ : ஆண்: 44, பெண்: 67(ஆண்டுகள்)
எழுத்தறிவு ; 48%
தலைநகர் : பெனும் பென்ஃ
மொழி : ஹெமர்
நாணயம் : ரியல் = 100 சென்.

36. பிலிப்பைன்சு (PHILIPPINES) — குடியரசு.

நிலப்பரப்பு : 3,00,000
மக்.தொ : 5,33,50,000
மக்.தொ.பெ: 2.7%
மக்.வா.எ : ஆண்: 59, பெண்: 62(ஆண்டுகள்)
எழுத்தறிவு : 88%
தலைநகர் : மணிலா,
மொழி : பிலிப்பினோ, ஆங்கிலம், ஸ்பேனிஷ்
நாணயம் : பிலிப்பைன் பீஸோ = 100 சென்டாவோஸ்

37. மலேசியா (MALAYSIA)—முடியரசு

நிலப்பரப்பு : 3,29,749 ச. அ. மா
மக். தொ : 1,50,70,000
மக். தொ. பெ : 2.5%
மக். வா. எ : ஆண் : 62, பெண்: 65 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 75%
தலைநகர் : கோலாலம்பூர்
மொழி : பஹாசா மலேசியா,சைனீசு தமிழ்.
நாணயம் : ரிங்கிட் = 100 சென்.

38. சிங்கப்பூர் (SINGAPORE) —குடியரசு

நிலப்பரப்பு : 618 ச. அ. மா.
மக். தொ : 25, 30,000
மக். தொ. பெ : 1.2%
மக். வா. எ: ஆண் :69, பெண் 73 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 84.%
தலைநகர் : சிங்கப்பூர்
மொழி : சைனீசு, மலாய், தமிழ், ஆங்கிலம்.
நாணயம் : சிங்கப்பூர்-டாலர் = 100 செண்ட்ஸ்

39. புருனை (BRUNEI) — குடியரசு

நிலப்பரப்பு : 5,765, ச.அ.மா.
மக். தொ : 213,000
மக். தொ.பெ : விளக்கம் இல்லை
மக். வா. எ : ,,
எழுத்தறிவு : ,,
தலைநகர் : பந்தர் செரி பகவான்
மொழி : மலாய், ஆங்கிலம்
நாணயம் : புருனை டாலர் = செண்ட்ஸ்

40. இந்தோனேசியா (INDONESIA) — குடியரசு

நிலப்பரப்பு : 19,19,400 ச.அ.மா
மக்.தொ : 1580,00,000
மக். தொ.பெ : 1.7%
மக்.வா.எ : ஆண்: 64, பெண்: 49 (ஆண்டுகள்)
எழுத்தறிவு : 64%
தலைநகர்: சகார்தா
மொழி : பஹாசா இந்தோனேசியா
நாணயம் : ருப்பியா = 100 சென்ர

(தொடரும்)

மக்கள் காடுகள்.

நகரங்களை விநோபா 'மக்கள் காடுகள்' (Jungle of Human beings)என்று கூறுவார். தமிழ்நாட்டில் மொத்த மக்கள் தொகையில் 34.2 விழுக்காட்டு மக்கள் நகரங்களில் வாழ்கின்றனர். இதில் 20 விழுக்காட்டினர் சென்னையில் மட்டும் வாழ்கின்றனர். 1991-இல் சென்னை மக்கள் தொகை 53.6 இலக்கம்; கோவையில் 11.4 இலக்கம் பேரும், மதுரையில் 10.9 இலக்கம் பேரும் வாழ்கின்றனர்; இந்தியாவில் பம்பாயில்தான் மக்கள் தொகை அதிகம். அங்கு ஒரு கோடியே இருபத்தைந்து இலக்கம் பேர் வாழ்கின்றனர்: இரண்டாவது நகரம் கல்கத்தா 1.08 கோடி; மூன்றாவது தில்லி; 83,8 இலக்கம். நான்காம் இடம் சென்னை;

இந்தியாவில் உள்ள மக்கள் தொகையில் ஏறத்தாழ 40 விழுக்காட்டுப் பேர் நகர்ப்புறச் சேரிகளிலும் நடைபாதைகளிலும் வாழ்கின்றனர்.

O

மகனே நான் திருந்திவிட்டேன்!

ஆங்கிலம்: தமிழ்:
அரோல்டு மல்கிங் மு. ஆறுமுகம் க.இ.ச.இ., வழக்குரைஞர்.

அன்பு எழில்,

நீ அளித்த நான்கு நாள்கள் கெடு இன்றுடன் முடிகின்றது. அலுவலக வேலை நிமித்தம் இவ்வூர் வந்த இந் நான்கு நாள்களில் உனக்கு வரைந்த மடல்கள் பல. கிழித்தெறிந்த முறைகள் பல, புகைக்கும் இன்பம் இழக்க வேண்டுமென்ற சினத்தால் உனக்கு வரைந்த பல மடல்களைக் கிழித்தெறிந்தேன். ஆனால் நீ விடுத்த வேண்டுகோள் என் முன் வந்து நிற்கையில் உன் வழிக்கு வருவது தவிர வேறு எதுவும் செய்ய என்னால் இயலவில்லை. எவ்வகையிலேனும் உனக்கு ஆறுதல் கூறிவிட்டு உன் வேண்டுகோளைப் புறக்கணித்துவிட்டு எப்பொழுதும் புகைக்குமின்பம் பெறலாம் எனப் பல முறை முயன்றேன். உன் உறுதியின் முன்பு அவை யாவும் பயனற்றவை என்று உணர்ந்து இன்று ஒரு முடிவெடுத்தேன்.

அன்றொரு நாள் வானொலியில் புகைப்பதினால் புற்றுநோய் வருவதால் புகைப்பதைக் கைவிட வேண்டுகோள் விடுத்தமை கேட்டுப், "புகைப்பதினால் தங்களுக்கு நலன் ஏற்படுமா?" எனக் என்னிடம் உசாவினாய். "இல்லை" என நான் விடையிறுக்க, உடனே நீ "அப்படியாயின் தாங்கள் ஏன் புகைக்க வேண்டும்" என எளிதாய்க் கேட்டாய். 'ஒரு பழக்கம்தான்' என்பதைத் தவிர வேறு எதையும் என்னால் கூற இயலவில்லை.

மறு நாள் ஒரு திங்களிதழில் புற்று நோய் பற்றிய கட்டுரையைப் படித்துவிட்டுப் புகைப்பதை அருள் கூர்ந்து கைவிடும்படி என்னிடம் வேண்டினாய். ஆனால் நான் உன்பேச்சையே வேறு வழியில் திருப்பி அந்நேரத்திற்கு மட்டும் உன் எண்ணத்தை மறக்கடித்தேன்? உன் உறுதிப் பண்பு உன்னை விட்டு எங்குச் செல்லும்? நீ அதை மறக்கவில்லை.

மறுநாள் இரவு நாம் உணவுட்கொள்ளுங்கால் நீ மறுபடியும் என்னிடம் வேண்டினாய். உன் ஆசிரியர்கள் கூறியதையும் அறிஞர்கள் இதழ்களில் எழுதியதைப் படித்ததையும் என்னிடம் எடுத்துரைத்து மறுபடியும் வேண்டினாய். "சாப்பிடு எழில்! இது பற்றி நாம் பிறகு பேசலாம்" என்றுதான் என்னால் இயம்ப முடிந்ததன்றி, "இல்லை எழில்! இனி நான் புகைக்கவில்லை" என்று உறுதி கூற இயலவில்லை.

திடீரென்று உணவுண்பதை விடுத்து எழுந்து நின்றாய். உன் சின்னஞ் சிறிய மலர் முகத்தில் தெளிவான உறுதியான எண்ணம் எனக்குத் தெரிந்தது.

"தந்தையே! தாங்கள் புகைப்பதைக் கை விடவில்லையெனில் நான் புகைக்கத் தொடங்குவேன். தாங்கள் புகைப்பதைக் கை விடுவது ஒன்றுதான் என்னைப் புகைக்கத் தொடங்குவதை நிறுத்த முடியும். இஃது உறுதி, அலுவலக வேலை நிமித்தம் நாளை வெளியூர் சென்று தாங்கள் நான்கு நாட்கள் கழிந்து இவ்விடம்

வரும்பொழுது உங்கள் முடிவைக் கூறுங்கள்,'' என்று உறுதியுடன் கூறிவிட்டு உறங்கச் சென்றுவிட்டாய்.

எழில்! கடந்த மூன்று நாள்களாக அலுவலக வேலையில் கூட மனத்தைச் செலுத்தாமல் நீ கூறியதையே எண்ணிக் கொண்டிருந்தேன். உன் உறுதி எனக்குத் தெரியும். நான் புகைப்பதைக் கைவிடவில்லையெனில் நீ உறுதியாகப் புகைக்கத் தொடங்கி விடுவாய்.

எழில்! எழில்! என்னால் புகைப்பதைக் கைவிட இயலுமா? அவ்வாற்றல் எனக்குண்டோ? இத்தனை ஆண்டுகளாக அதனால் அடைந்த இன்பத்தை இழக்க என் மனம் ஒப்புமா? இதை எவ்வாறு கற்றேன்? ஏன் அதை இழக்க என் மனம் ஒப்பவில்லை? இவற்றை என்னையே நான் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டேன்.

எழில்! மற்றவர்களைப் போன்றே என் சிறு அகவையில் பெரியவர்கள் புகைப்பதைக் கண்டு நானும் புகைக்கத் தொடங்கினேன். புகைப்பது எனக்குப் பொய்யான ஒரு பெருமையைக் கொடுத்தது. அத்துடன் மது அளிக்கும் மயக்கத்தையும் இன்பத்தையும் அஃது எனக்கு அளித்தது.

நான் தொடர்ந்து புகைத்தேன்; உன் அன்னையை மணந்த பின்பும் புகைத்தேன். முதலில் உன் அன்னை அறியாதவாறு புகைத்தேன், நாளடைவில் அவள் முன்னிலையிலேயே புகைத்தேன். இதைக் கண்ணுற்ற உன் அன்னை துடித்தாள். என்னிடம் கெஞ்சினாள். மன்றாடினாள், அதை விட்டு விடும்படி! ஆனால் நான் அவளுக்குப் பொய்க் கரணியங்களைப் புகட்டி அவளை ஏமாற்றி விட்டுத் தொடர்ந்து புகைத்தேன். ஏனோ அதை மட்டும் என்னால் நிறுத்த இயலவில்லை.

திரைப்படக் கூடத்திற்குச் சென்றால் தொடர்ந்தாற்போல் இரு நாழிகையேனும் என்னால் தாங்க இயலாது. உன் அன்னையின் பெரு மூச்சையும் அவளையும் புறக்கணித்துவிட்டுக் கொட்டகைக்குள்ளே உள்ள கடைக்கு ஓடிப் புகைத்த பின்தான் மன அமைதி பெறுவேன். விருந்துகளின் போதும், விருந்தினருடன் உரையாடும் போதும் அலுவலகத்தில் ஆழ்ந்த வேலையிலீடுபட்டிருக்கும் போதும், ஊர்திக்காகக் காத்திருக்கும்போதும் நான் ஒன்றன் பின் ஒன்றாகப் புகைத்துக் கொண்டேயிருப்பேன்.

எழில்! புகைக்க வேண்டுமென்ற எண்ணமின்றியும் புகைக்கிறோம் என்ற உணர்வின்றியும் கூடச் சில போழ்து புகைக்கின்றேன். துயில் செல்லும் இறுதி வேளையிலும் புகையை உள் இழுத்துவிட்டுத்தான் உறங்குகின்றேன். காலை எழுந்ததும் நான் செய்யும் முதல் வேலை புகைப்பதுதான்; சிற்றுண்டி வரத் தாழ்வாயினும் உண்ணாமல் வெறும் வயிற்றோடு புகைத்தால் வயிறு தீப் போன்று எரியும் என்று அறிந்தும் புகைக்கிறேன்; முதல் புகைச்சுருள் வயிற்றை எரிப்பது போல் தோன்றினும் இரண்டாவது அதைச் சரிப்படுத்தி விடும் என்று எண்ணிக்கொண்டு அடுத்தடுத்துப் பற்ற வைக்கிறேன்;

எழில்! விளம்பரங்களைக் கண்டு நான் என்னையே ஏமாற்றிக் கொண்டேன். ஒவ்வொரு முறையும் தங்கள் குழுமத்தின் வெண் சுருட்டு தீங்கற்றது என அறிவிக்கும் புதுப்புது விளம்பரத்தைக் கண்டு, அதில் கூறப் பெற்றிருக்கும் புகைச் சுருளுக்கு மாற்றிக் கொண்டும், இன்னும் இதை விடத் தீங்கற்றது வராதா என்று ஏங்கி ஏங்கியும் நாள்களைக் கழித்திருக்கின்றேன்.

நன்றாக அறிவு வளர்ச்சியுற்று, புகைப்பது தீங்கு; புற்று நோய் வரும் என அறிந்தும் என்னால் கைவிட இயலவில்லை; இவ் வகையில் நான் ஒரு குழந்தையேதான். எத்தனையோ அறிஞரின் அறிவுரைக்குப் பின்னும் இப் பழக்கத்தை என்னால் கைவிட முடியவில்லை. உன் அன்பான அன்னையின் கண்ணீர்கூட என்னைத் திருத்த இயலவில்லை.

ஆனால், எழில் உன் உருவில் இறைவனையே யான் காண்கின்றேன். பத்து ஆண்டு கூட நிரம்பப்பெறாத சிறுவன் 'தாங்கள் கை விடவில்லையெனில் நான் புகைக்கத் தொடங்குவேன்' என்று உறுதியாகக் கூறுவதைக் கேட்டுக் எத் தந்தைதான் தன் மகனின் உடல் நலம் கெட விழைவான். வேண்டாம் எழில்! நீ புகைக்கத் தொடங்காதே! நான் இன்றோடு புகைப்பதைக் கை விட்டு விடுகிறேன். ஆனால் நீ மட்டும் அருள் கூர்ந்து புகைக்கத் தொடங்கி விடாதே. வாய் வழி தொண்டை வழி, மூச்சுக் குழல் வழிச் சென்ற நஞ்சு உன் பிஞ்சு உடலில் செல்வதை நான் பொறுக்க மாட்டேன். கெடுதியான புகையை உள் இழுத்து நான் அடையும் இன்பம் எனக்கு இனி வேண்டா. நான் இன்றோடு நிறுத்தி விடுகிறேன். உன் அன்பு அன்னையிடம் இதைக் கூறு. அவள் மிகவும் மகிழ்வுறுவாள். பல நாள்கள் அவள் வடித்த கண்ணீருக்குப் பலன் ஏற்படுவதை எண்ணி அகமகிழ்வாள்.

ஓர் உதவி எழில்! என் போன்று எத்தனையோ தந்தையர் இதனுடைய தீங்கை அறிந்திருந்தும் பழக்கத்தின் அடிமையாகி மீளவும் வழியின்றி அல்லலுற்றுக் கொண்டிருக்கின்றனர். அவர்களை அவர்களின் மகன்களின் மூலமாகவே நீ கடைப் பிடித்த வழியினாலேயே திருத்துவதற்கு முயற்சி செய்! உறுதியாகத் தாங்கள் பெற்ற செல்வங்களின் நலன் கருதி அக்கொடிய பழக்கத்தைக் கை விடுவர். 'நீங்கள் புகைப்பதைக் கை விடவில்லையெனில் நான் புகைக்கத் தொடங்குவேன்' என்ற உன் போன்ற செல்வங்களின் ஒலி இல்லந் தொறும் கேட்கட்டும். அதைக் கேட்டு அனைவரும் திருந்தட்டும். அதைக் கண்டு தமிழன்னை உன் போன்ற செல்வங்களையெல்லாம் வாழ்த்தட்டும். நாளை உன்னை இம் மகிழ்வான செய்தியுடன் வந்து பார்க்கின்றேன். உன் அன்னைக்கு என் அன்பு. உனக்குந்தான்.

உன் அன்புத் தந்தை, மாவிறையன்.

(பி.கு: இது, 'தென்மொழி' சுவடி 9, ஓலை 9-10 இல் வெளிவந்த கதை; 'தமிழ்ச்சிட்டு' இளையோர்களுக்காக மீண்டும் இங்கு வெளியிடப் பெற்றது.)

கதைக்குள் ஒரு கதை!

— சு. திருவாணன் —

அழகிய இயற்கைச் சூழல் நிறைந்த சிற்றூர் பூம்பொழில். மக்கள் எல்லாரும் கள்ளங் கவடற்றவர்கள். அவர்களிலே ஓர் இளைஞனை அவ்வூரில் உள்ள எல்லாருக்கும் மிகவும் பிடிக்கும். காரணம் அவன் மாலை நேரமானதும் ஊர்ச் சாவடியில் கூடுகிறவர்களிடையே உட்கார்ந்து கொண்டு நாட்டு நடப்புகளை கதை வடிவில் சொல்வது வழக்கம். கடுமையான உழைப்பினுல் பாதிக்கதை கேட்கும்போதிலேயே அவர்களில் பலர் தூங்கத் தொடங்கி விடுவார்கள். இளைஞனும் அதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. அன்றும் அதேபோல் ஒரு கதை சொல்லத் தொடங்கினுன்.

''ஓர் ஊரிலே நல்லன் ஒருவன் வாழ்ந்து வந்தான். நல்லனுக்கு அப்புக்குட்டன், பசவையா, சிறீராமுலு என்று மூன்று நண்பர்கள் இருந்தார்கள். இவர்கள் நால்வருமே ஆளுக்குப் பத்து வேலி நிலம் வைத்து பயிர்த்தொழில் செய்து பிழைப்பவர்கள்தாம். ஒருநாள் தாடி, மீசை, தலைமுடி எல்லாம் நரைத்துப் போன அகவை முதிர்ந்த பெரியவர் ஒருவர் வந்தார். பெரியவருடைய நடையிலே தளர்ச்சி கொஞ்சமும் இல்லை. முகத்திலும் மலர்ச்சி குறையவில்லை. பெரியவர் நல்லனிடம், ''தம்பி எனக்குப் பத்து மாம்பழங்கள் கிடைத்தன. உன்னைப் பற்றிக் கேள்விப் பட்டு அதை உனக்குக் கொடுக்க வந்தேன்'' என்று கூறிக் கொடுத்துவிட்டுச் சென்றூர்.

நல்லன் பத்து மாம்பழங்களையும் தானே சாப்பிடுவதா என்று தயங்கி நண்பர்களுக்கும் கொடுக்கலாம் என எண்ணினுன். அப்படியானுல் எப்படிப் பகிர்ந்து தருவது எனச் சிந்தித்தான். ஆளுக்கு இரண்டு மேனி கொடுத்தால் மீதம் நான்கு பழங்கள் தன்னிடம் இருக்கும். ஆனுல் நண்பர்களை விடக் கூடுதலாகத் தான் எடுத்துக் கொள்ள மனம் வரவில்லை. பழத்தை வெட்டவும் மனமில்லை. நண்பர்கள் தன்னைப் பற்றித் தவருக நினைத்துக் கொள்வார்களே என்று எண்ணினுன். ஆளுக்கு மூன்று மேனி கொடுத்தால் தனக்கு ஒன்றுதான் கிடைக்கும் எனக் கணக்குப் போட்டான். இருப்பினும் ஒன்றே போதும் என்று நிறைவடைந்து, நண்பர்களை அழைத்து நடந்ததைக் கூறிப் பழங்களைக் கொடுத்தான். நண்பர்களும் நல்லனுக்கு ஒரு பழம் மட்டும் போதுமா என்பதைப் பற்றிக் கவலையே கொள்ளாமல், இவனுடைய நல்ல குணத்தை மிகவும் பாராட்டி விட்டுச் சென்றூர்கள்.

மறுநாளும் அந்தப் பெரியவர் வந்தார். அன்று மாம்பழம் கொண்டு வரவில்லை. ஆனுல் வந்தவர் வெள்ளிக் காசுகள் பத்தைக் கொடுத்து விட்டுச் சென்றூர். இவனும் முன் நாளைப் போலவே நண்பர்கள் மூவருக்கும் ஆளுக்கு மூன்றும், தனக்கு ஒன்றுமாகப் பகிர்ந்து கொண்டான். நண்பர்களும் முன்னைப் போலவே பாராட்டி விட்டுச் சென்றூர்கள்.

பெரியவர் நாள்தோறும் வரத் தொடங்கினார்; எதைக் கொடுத்தாலும், பத்து பத்தாகத்தான் கொடுப்பார்; நல்லனும் வழக்கம் போலத் தனக்கு ஒன்றை மட்டும் எடுத்துக் கொண்டு, மீதி ஒன்பதை நண்பர்களுக்கு பகிர்ந்தளிப்பான். அவர்களும் பேசாமலே வாங்கிக் கொண்டு செல்வார்கள். நாளடைவில் நண்பர்கள் மூவரிடமும் ஏராளமான செல்வம் குவிந்துவிட்டது; நண்பர்கள் மூவரும் பயிர்த் தொழில் செய்வதை விட்டுவிடலாம் என்று ஒன்றுகூடிப் பேசி, வெறுமனே ஊர்ச் சுற்றி வரத் தொடங்கி விட்டனர். நல்லன் மட்டும் எப்போதும்போல் பயிர்த் தொழில் செய்து கொண்டு இருந்தான். அத்துடன் நாள்தோறும் பெரியவர் தருவதை நண்பர்களுக்கு வழக்கம் போல் கொடுப்பதைக் கொடுத்துவிட்டு ஒன்றை மட்டும் வைத்துக் கொள்வான்;

இந்நிலையில், நண்பர்கள் மூவர் மனத்திலும் ஓர் எண்ணம் தோன்றியது. பெரியவர் கொண்டு வந்து தருவதில் நல்லன் ஒன்றை மட்டும் எடுத்துக் கொள்கிறானே, அவனுக்கு அதுவும் தேவையா? என்று எண்ணி, அந்த ஒன்றையும் தாமே எடுத்துக் கொள்வோம் என்று திட்டமிட்டார்கள். அவ்வாறே ஒருநாள் பெரியவர் கொடுத்த பத்துத் தங்கக் கட்டிகளில் ஒன்பதைப் பெற்றுக் கொண்டு, நல்லன் கையில் இருந்த ஒரு தங்கக் கட்டியையும், 'உனக்கு எதற்கு?'' என்று கூறிப் பறித்துக் கொண்டார்கள் நண்பர்கள். நல்லனும் அதற்குக் கொஞ்சம் கூடக் கவலை கொள்ளவில்லை. யாரோ கொடுத்தது தானே, நண்பர்கள் எடுத்துக் கொள்வதால் தனக்கு ஒன்றும் இழப்பில்லையே என்று அமைதி அடைந்து விட்டான்;

இது நடந்த மறு நாளிலிருந்து பெரியவர் வருவது இல்லை; நல்லன் அதைப் பற்றி ஒன்றும் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் நண்பர்கள் நல்லனிடம் வந்து எங்கே தங்கள் பங்கு என்று கேட்டார்கள். நல்லனும் பெரியவர் வரவில்லையெனக் கூறினான். நண்பர்களோ, ''கிழவர் வரவில்லையென்றாலும் இவ்வளவு நாள் தங்களுக்குக் கொடுத்தது போல் இப்போதும் ஏதாவது தர வேண்டும்'' என்று வற்புறுத்தினார்கள். நல்லன் நட்பு பட்டுப் போய் விடக்கூடாதே என்று எண்ணி வீட்டிலிருந்த பத்து மூட்டை நெல்லில், ஆளுக்கு மூன்று மூட்டை மேனி கொடுத்துவிட்டான். தனக்கு மிஞ்சியது ஒரு மூட்டை நெல் மட்டும்தான். அதனாலென்ன பெரியவர் வராததால், இனிமேல் நண்பர்கள் வரமாட்டார்கள் என்று எண்ணி மனத்தைத் தேற்றிக் கொண்டான்.

ஆனால், அடுத்த நாள் நண்பர்கள் நேரே நல்லன் வீட்டுக்குள் நுழைந்தார்கள். நல்லன் தடுத்தும் வீட்டிலிருந்த ஒரே மூட்டை நெல்லையும் எடுத்துச் சென்று விட்டார்கள். நல்லன் செய்வதறியாது திகைத்து நின்றான். அப்போது தான் முதன் முதலாகக் கவலை கொள்ளத் தொடங்கினான்; இந்தக் கவலையிலேயே அன்று இரவு தூக்கமின்றிக் கழிந்தது;

விடிந்ததும் வழக்கம் போல நிலத்திற்குச் சென்று வேலை செய்யத் தொடங்கினான். அங்கே நண்பர்கள் மூவரும் அவர்களுடைய அடியாட்களும் நல்லனுடைய நிலத்தைக் கவர்ந்து கொண்டதைக் கண்டான். நல்லன் கூச்சல் இட்டான். நண்பர்களோ நல்லனை நன்றாக அடித்து உதைத்துத் துரத்திவிட்டார்கள். நல்லன் அழுதுகொண்டே வீட்டுக்குத் திரும்பினான். ஆனால் வீட்டையும் நண்பர்களுடைய உறவினர்கள் கைப்பற்றி இருந்தது தெரிந்தது. நல்லனுக்கென்று யாரும் உதவிக்கு வரவில்லை. நாளடைவில் நல்லனுக்கு மனநிலைக் கோளாறு ஏற்பட்டு இன்று வீடு வீடாக இரந்து (பிச்சை எடுத்து) சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறான். நல்லனுடைய விடிவுக்காக யார் உதவப் போகிறார்களோ?'' என்று கவலையோடு கூறி இளைஞன் கதையை முடித்தான். அனைவருக்கும் வியப்பாக இருந்தது. அன்று கதை நடுவில் யாருமே தூங்கவில்லை. எல்லாரும் கலைந்து வீடு திரும்பிக் கதை நினைவோடு தூங்கி விட்டார்கள்.

அன்று இரவு அவ்வூரின் ஒரு வீட்டின் வாயிற் கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. வீட்டினுள் தூங்கிக் கொண்டிருந்த பக்கத்து நகரில் படிக்கும் கல்லூரி மாணவன் எழுந்து வந்து கதவைத் திறந்தான். வெளியே ஒரு பெரியவர் நின்றிருந்தார். மாணவன் அவரைப் பார்த்து, 'நீங்கள் யார் இந்த நள்ளிரவில் உங்களுக்கு என்ன வேண்டும்'. என்று கேட்டான். 'நான் யார் என்பது இருக்கட்டும். உன்னிடம் ஒரு கமுக்கமான செய்தி சொல்ல வேண்டும். பகலில் இந்த நாட்டு மக்கள் எல்லாரும் விழித்துக் கொண்டே தூங்குகிறார்கள். நீ தூக்கத்தில் விழித்திருப்பாய் என நினைத்து இங்கு வந்தேன். நான் எண்ணியது சரியாகி விட்டது. நீ தூக்கத்தில் விழித்திருக்கிறாய்,' என்று கூறி மேலும் தொடர்ந்தார். 'இளைஞன் கூறிய கதையைக் கேட்டாயா தம்பி எனக் கேட்டார. 'கதையைக் கேட்டுவிட்டுதான் வந்தேன். கதையின் முடிவு வருத்தம் தருவதாக இருக்கிறது' எனக் கூறினான். 'கதையில் வரும் நல்லன் யார்? எங்கே இருக்கிறான் என்று தெரியுமா தம்பி?' என்று கேட்டார் பெரியவர். தனக்குத் தெரியாதென்றான் மாணவன். அதைக் கூறத்தான் தாம் இங்கு வந்ததாகவும், அந்த நல்லன் இங்கேயே இருப்பதாகவும் சொன்னார். மாணவன் சுற்றும் முற்றும் பார்த்து ''ஒருவரும் இல்லையே'' என்று கூறினான். பெரியவர் சற்று வேகத்தோடு, ''அந்த நல்லன் வேறு யாருமில்லை; நீ தான் தம்பி''என்று கூறினார். மாணவன் இ'து என்ன கதைக்குள் கதையாக இருக்கிறதே உன்று எண்ணினான். ''என் பெயர் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா பெரியவரே'', என்று கேட்டான் மாணவன். பெரியவரும் சிரித்துக் கொண்டே, ''தெரியும் தம்பி உன் பெயர் 'தமிழன்' என்று கூறினார். மாணவனுக்கு அப்போது தான் மண்டையில் உறைத்தது. '':நான் தானா அது. அவ்வாறெ-

(தொடர்ச்சி 16-ஆம் பக்கம்)

இந்தியாவில் குற்றங்களும் கொலை, கொள்ளைகளும்!

இந்தியா முழுவதும் வழிப்பறி, திருட்டு, கொள்ளை, கற்பழிப்பு, கொலை முதலிய குற்றங்கள் முன்பு நடந்ததைவிட, நாளுக்கு நாள் மிகுந்து கொண்டே வருகின்றன என்று அண்மையில் செய்த காவல்துறை ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆய்வு முடிவுகள் வருமாறு: இந்தியாவில்,

- 7 நொடிக்கு ஒரு குற்றச் செயல் நடந்து கொண்டே இருக்கிறது.
- 20 நொடிகளுக்கு ஒருமுறை ஒரு தண்டனைக் குற்றம் நடைபெறுகிறது.
- ஒரு நிமையத்துக்கு ஓர் அத்துமீறல் நிகழ்கிறது.
- ஒன்றரை நிமையத்துக்கு ஒரு திருட்டும்,

  2 நிமையத்துக்கு ஒரு வன்முறைச் செயலும்,

  4 நிமையத்துக்கு ஒரு கொள்ளையும்,

  5 நிமையத்துக்கு ஒரு கலவரமும்,

  14 நிமையத்துக்கு ஒரு வழிப்பறிக் கொள்ளையும்,

  15 நிமையத்துக்கு ஒரு கொலையும்,

  52 நிமையத்துக்கு ஒரு கற்பழிப்பும்,

  நடைபெறுகின்றன என்று ஆய்வுகள் காட்டுகின்றன.

முன்பு இருந்ததைக் காட்டிலும் பெரும் அளவில், மகளிரும் இளைஞரும் இவை போலும் குற்றங்களில் ஈடுபடத் தொடங்கியிருக்கிறார்கள்.

1951-1990க்கு இடையில் மக்கள் தொகை 127.6 விழுக்காடு அதிகரித்திருக்கிறது என்றால், குற்றங்களின் எண்ணிக்கையோ 146.9 விழுக்காடு உயர்ந்திருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

குற்றங்கள் இதுபோல் அதிகரித்துக் கொண்டே போவதற்கு மிகவும் முகாமையான காரணம், குற்றவாளிகள் தண்டிக்கப் படாமல் போவதாகும்.

அத்துடன் தண்டனையில்லாமல் பிணையலில் வெளியே விடுவிக்கும் அறமன்ற நடுவர்களின் போக்கு காரணமாக இத்தகைய ஏதங்கள் உருவாகியுள்ளனவாகவும் சொல்லப் பெறுகின்றன.

இந்த நிலை இப்படியே தொடருமானால்: சட்டம், அறநெறித்துறை மீது மக்களுக்கு இருக்கும் மதிப்பும், பெருமையும் குறையும்; நம்பிக்கையிழக்கும் நிலையும் உருவாகும்; அப்பொழுது மக்களே சட்டத்தைத் தங்கள் கைகளில் எடுத்துக்கொள்ளும் சிக்கலான நிலை ஏற்படும் என்றும் எச்சரிக்கப் பெற்றுள்ளது.

மற்ற மாநிலங்களில் பஞ்சாப் போராளிகளின் நடவடிக்கை கடந்த ஆண்டில் பெருமளவுக்கு உயர்ந்திருக்கிறது. பஞ்சாபுக்கு வெளியே மட்டும் 290 வன்முறை நிகழ்ச்சிகள் நடந்துள்ளன.

373 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதுவே கடந்த 1990-இல் 117 நிகழ்ச்சிகளாகவும், கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 110 ஆகவும் இருந்தன.

சம்மு—காசுமீரில் 1990-ஆம் ஆண்டில் 3905 ஆக இருந்த நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை 8122 ஆகக் குறைந்தது. அதே நேரம் இறந்தவர்களின் எண்ணிக்கை 1393-இலிருந்து 1777 ஆக உயர்ந்துள்ளது.

போராட்டக் காரர்களின் நடவடிக்கைகள் ஆந்திராவிலும், பீகாரிலும் அதிகரித்துள்ளன.

ஆந்திராவில், 1230 நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. 232 பேர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

பீகாரில், 415 நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. 166 பேர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

1971 முதல் 1990 வரையிலான காலத்தில் குற்றங்கள் புரியும் மகளிரின் எண்ணிக்கை 146,7 விழுக்காடாக அதிகரித்திருக்கிறது. பெண்கள், சிறுமிகளைக் கடத்திய குற்றத்துக்காகவே பெரும்பான்மையான பெண்கள் சிறைப்படுத்தப்பட்டுள்ளனர்.

பொறுப்பில் விடக்கூடாத குற்றங்களுக்கும் தாராளமாகப் பிணையலில் விடுவிக்க நடுவர்கள் இசைவு வழங்குவதன் காரணமாகவே குற்றங்கள் நாளுக்கு நாள் பெருகி வருவதாகவும் அந்த ஆய்வு மூலம் தெரிய வந்துள்ளது.

1985 முதல் 1987 வரையிலான காலத்தில், பிணையலில் விடமுடியாத குற்றங்களில் 5,44,811 பேர் தளை செய்யப்பட்டதாகவும், அவர்களில் 4, 21, 785 பேர் பொறுப்பில் விடுதலை செய்யப்பட்டிருப்பதாகவும், நடுவண் பைதிரம் (மத்திய பிரதேசம்), தமிழ்நாடு. தில்லி, கல்கத்தா, பம்பாய் ஆகிய நகரங்களின் காவல்துறை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அலுவலகத்தின் நடவடிக்கைகள் மூலம் தெரியவந்துள்ளது.

— நன்றி: 'உலகத்தமிழர்', 1-12-92.

(14-ஆம் பக்கத் தொடர்ச்சி)

னில் நீங்கள் யார் பெரியவரே?'' என்று கேட்டான். தன் பெயர் ''அறிவு'' என்று கூறிவிட்டு அப் பெரியவரின் உருவம் காற்றாய்க் கரைந்து அவனுள் புகுவதுபோல் இருந்தது.

திடுக்கிட்டு விழித்தெழுந்தான் மாணவன். தான் இதுவரை கண்டது கனவா, நனவா என மயங்கினான். ஆனாலும் தனக்குள் ஒரு மாற்றம் ஏற்பட்டிருப்பதை மட்டும் உணர்ந்தான், அந்தக் கல்லூரி மாணவன். விடிந்ததும் எழுந்து உடைமாற்றிக் கொண்டு, உள்ளத்தில் ஏதோ ஓர் உறுதியான முடிவோடு வெளியே புறப்பட்டுச் சென்றான். மாணவனின் நடையில், பார்வையில் புதிய வேகமும் ஒரு மிடுக்கும் தெரிந்தது. இனி நல்லன் மீள்வான், இல்லையில்லை, தமிழன் மீள்வான் என்று நினைத்தது அவன் உள்ளம்.

மி.வி. கேட்கின்ற உணர்வு நீடிப்பு 127 முதல் 215 மி.வி., பார்க்கும் உணர்வு நீடிப்பு 13 முதல் 45 மி.வி. ஆகும்.

- மக்களினத்திற்கு நாக்கில் மட்டுமே சுவையை அறிகின்ற உணர்வு மொட்டுகள் உள்ளன. விலங்குகளுக்கோ வாய் முழுவதும் சுவையை அறியும் உணர்வு மொட்டுகள் உண்டு. சில கீழ்நிலை உயிரினங்களுக்கு உடல் முழுவதும் சுவை மொட்டுகள் அமைந்திருக்கின்றன.

நம்முடைய நாக்கில் உணரப்படும் சுவையுணர்வுத் தன்மைகள் இவ்வாறு உள்ளன. இனிப்பை உணரும் சுவை மொட்டுகள் நுனி நாக்கில் உள்ளன. கசப்பை உணரும் சுவை மொட்டுகள் அடி நாக்கிலும், புளிப்பை உணர்பவை நாக்கின் விளிம்புகளிலும் உள்ளன. உவர்ப்பு (உப்பு)ச் சுவையை உணருபவை நாக்கின் விளிம்புகளிலும் நுனியிலும் உள்ளன.

- ஒருவர்க்கு ஒருவகைச் சுவையும் ஒருவகை மணமும் பிடிப்பது அல்லது பிடிக்காமலிருப்பது என்பது உடலின் தேவை அல்லது தேவையின்மையைப் பொறுத்தே அமைகின்றது என்று அறிவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். நமது உடலுக்குத் தேவையான பொருள்களின் சுவை, மணம் மேம்பட்டுத் தெரியும்.

- முதலாம் உலகப் போர் 1914 முதல் 1918-ஆம் ஆண்டு வரை 4 ஆண்டுகள் நடந்தது. இரண்டாம் உலகப் போர் 1939-முதல் 1945 வரை 6 ஆண்டுகள் நடந்தன.

முதல் உலகப் போரில் பிரான்சு, இங்கிலாந்து, உருசியா, அமெரிக்கா முதலிய நாடுகள் செர்மனியை எதிர்த்துப் போரிட்டன.

இரண்டாவது உலகப் போரில் செர்மனி, இத்தாலி, சப்பான் முதலிய நாடுகள் ஓரணியிலும், இங்கிலாந்து, பிரான்சு, சோவியத்து ஒன்றியம், அமெரிக்கா முதலிய நாடுகள் மற்றோரணியிலும் நின்று போராடின. அப்பொழுது செருமனியை இட்லரும், இத்தாலியை முசோலினியும் ஆண்டார்கள்.

இரண்டு போர்களையும் செர்மனியே தொடங்கியது. இரண்டிலும் செர்மனியே தோல்வியடைந்தது.

- இந்தியாவில் ஏறத்தாழ 4.4 கோடி குழந்தைத் தொழிலாளர்கள் பணிபுரிகிறார்கள். இவர்களில் 15 விழுக்காட்டினர் சிவகாசி தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் பணிபுரிகின்றனர். (15 அகவைக்கு உட்பட்ட அனைவரும் குழந்தைத் தொழிலாளர்கள் ஆவர்).

- உலகில், பெருகி வரும் தொழிற் சாலைகள் வெளியிடும் நச்சுப் புகைகளாலும் பிற வேதியல் பொருள்களின் கலவைகளாலும், காற்று மண்டலம் அதிக அளவில் மாசுபட்டு வருகிறது. அதனால் உலகின் இயற்கை அமைப்பு கெட்டுக் கொண்டு வருகிறது. இந்த வகைத் தாக்கங்களால், உலகில் ஒவ்வொரு நாளும் 50க்கும் மேற்பட்ட நிலத்திணை (தாவர) வகைகள், விலங்கு வகைகள் அழிந்து வருகின்றன. உலகில் நிலத்திணை வகைகளும், விலங்கு வகைகளும் ஏறத்தாழ ஒரு கோடிக்கு மேல் உள்ளன என்று மதிப்பிடப் பெற்றுள்ளது. இப்பொழுதுள்ள மாசுபட்டு வரும் நிலை இவ்வாறே தொடருமானால், அவ்வுயிரினங்களில் 10 இலக்கம் வகைகள் விரைவில் அழிந்து போகும் வாய்ப்புள்ளது. இச் செய்தியை உலக ஒன்றிய நாடுகளின் சுற்றுச் சூழல் திட்டக்குழு அறிவித்துள்ளது.

- ❖ சென்னையில் மட்டும் ஒவ்வொரு நாளும் அரசு மருத்துவமனைகளிலும், தனியார் மருத்துவமனைகளிலும் ஏறத்தாழ 2000 பேர்கள் நாய்க் கடிக்கு என பண்டுவம் பார்க்க வருகின்றனர் என்று ஒரு புள்ளி விளக்கம் கூறுகிறது.
- ❖ நாட்டிலுள்ள மக்களில் ஏறத்தாழ 90 விழுக்காட்டினர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்கும் ஏற்பாடுகள் நடந்து வருவனவாக நடுவண் செய்தி ஒலிப்பரப்புத் துறை அமைச்சகம் கூறியுள்ளது.
- ❖ "ஒருவனுக்கு உலகிலுள்ள அத்தனை உணவுப் பண்டங்களும், பொன்னும் பொருள்களும் ஒருங்கே கிடைத்தாலும் அவன் ஆசை நிறைவு பெறுவதில்லை; ஒரு பொருளை நுகர நுகர ஆசையானது, நெருப்பில் நெய் விட்டது போல் மேலும் மேலும் அதிகமாகுமே தவிர அது அடங்கி விடாது; உடல் கிழப் பருவம் அடைந்தாலும் ஆசைகள் மட்டும் இளமையாகவே இருக்கின்றன" என்று உபநிடதம் ஒன்று கூறுகிறது.
- ❖ இந்துமதம் என்பது பார்ப்பனியத்தைக் காக்கப் பார்ப்பனர்களால் பார்ப்பனருக்காகவே ஆக்கிக் கொள்ளப் பெற்ற ஒரு பார்ப்பன மதமே ஆகும்; இதை இந்து மதம் என்று அழைப்பது அனைவரையும் ஏமாற்றுகின்ற ஒரு தந்திர உத்தியே; உண்மையில் இம் மதம் வேத மதமே!
- ❖ இந்தியாவில் உள்ள மத, குமுகாய, சாதி, வகுப்பு, அரசியல் பூசல்கள்—சிக்கல்கள்—அனைத்துக்கும் இந்து மதமே தலையாய காரணம்;
- ❖ இந்தியாவில் சாலை நேர்ச்சி(விபத்து)களில் ஆண்டுக்கு ஏறத்தாழ 50000 பேர்கள் உயிரிழக்கின்றனர்.
- ❖ பார்ப்பான் நியாயமும், செட்டியார் வணிகமும், முதலியார் பெருமையும் 'வழ வழா கொழ கொழா' என்பது ஏற்கனவே சாதியம் தழுவிய ஒரு பழமொழியாகும்!
- ❖ நிலைவெள்ளி(எவர் சில்வர்) என்னும் செயற்கை மாழையில் (உலோகத்தில்) எஃகு 60விழுக்காடும், குரமியம்(Chromiam) 20 விழுக்காடும், வெளியம் (நிக்கல்) 10 விழுக்காடும் சேர்ந்துள்ளன;
- ❖ இசுலாமிய மதச் சட்டப்படி அம்மதத்தைச் சேர்ந்த ஓர் ஆண் நான்கு பெண்களை, மற்றவர்கள் உயிருடன் இருக்கும் பொழுதே, மணந்துகொள்ளலாம்; அவர்களை ஒரே நேரத்தில் வைத்து வாழ்க்கை நடத்தலாம். ஆனால் அம்மதத்தைச் சேர்ந்த ஒரு பெண் கணவன் இருக்க மறுமணம் செய்து கொள்ளக் கூடாது;
- ❖ ஒரு மாநிலம் முழுவதும் உள்ள மக்கள் தொகையில் 50 விழுக்காட்டிற்கும் குறைவாக உள்ள மதத்தினர் மதச்சிறுபான்மையினரும், மொழிச் சிறுபான்மையினரும் ஆவர்.
- ❖ இதுவரை உலகில் பலமொழிகளிலும் வெளிவந்துள்ள நூல்களில் கீழ்க்காணும் மூன்று பேர்களைப் பற்றித்தான் மிக அதிகமான நூல்கள் வெளிவந்துள்ளன;

  1. இயேசு நாதரைப் பற்றி 5200 நூல்கள்;
  2. சேக்சுபியரைப் பற்றி 3150 நூல்கள்;
  3. ஆபிரகாம் இலிங்கனைப் பற்றி 2350 நூல்கள்;

—செய்தி 'தினமணி சுடர்' 5-9-62

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600 005; (தமிழகம்)